MARCH – 2013
TAMIL PAPER – II

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38 க்கு என படிவம் ஒன்று தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதை நிரப்பி முதன்மை விடைத்தாளுடன் இணைக்கவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

1. எதிர்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெடுத்தெழுதுக.
(அ) வருவான் (ஆ) கண்டான்
(இ) படிக்கின்றான் (ஈ) செல்கிறான்

2. இளவழகன் வந்தான். இது ________ தொடர்.
(அ) குறிப்பு (ஆ) வெளிப்படை
(இ) இனங்குறித்தல் (ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

3. புறத்திணைகள் ________ வகைப்படும்.
(அ) ஐந்து (ஆ) ஏழு
(இ) பன்னிரண்டு (ஈ) பத்து

4. வடக்கு + கிழக்கு எவ்வகைப் புணர்ச்சி எனக் கூறுக.
(அ) பண்புப்பெயர் புணர்ச்சி (ஆ) இயல்புப் புணர்ச்சி
(இ) மகரஈற்றுப் புணர்ச்சி (ஈ) திசைப்பெயர்ப் புணர்ச்சி

5. 'நல்லவை' - இச்சொல்லை அலகிட்டால் ________ எனப் பிரியும்.
(அ) நேர் நேர் (ஆ) நிரை நேர்
(இ) நேர் நிரை (ஈ) நிரை நிரை

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

6. மாலை என்பது ________ திணைக்குரிய சிறுபொழுது.

7. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது ________ அணி.

8. விடை ________ வகைப்படும்.

9. மலரன்ன சேவடி - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ________.

10. முஃடீது - இச்சொல்லில் பயின்றுவரும் குறுக்கம் ________.

## பகுதி - 3

**சுருக்கமாக விடையளிக்க :** **10x1=10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. படி - இச்சொல்லை வினையெச்சமாக்குக.

13. தொகைச் சொல்லை விரித்தெழுதுக. நானிலம்

14. கிளி கல்லால் அடிபட்டது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
இன்று பேருந்துகள் ஓடாது.

16. கீழ்க்காணும் தொடரில் சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காணமுடியும்.

17. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
வலது பக்கச் சுவற்றில் எழுதாதே.

18. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள, பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.
இறைவனை நோக்கி யாத்திரை செல்லல் பக்தருக்கான மார்க்கம்.

19. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
ஓட்டுநர் நடத்துநர் முதலான பணிகளுக்கும் உடற்கூறுத் தகுதியுடையவர்கள் மட்டுமே சேர இயலும்.

20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.
முதலைக் கண்ணீர்

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.** **5x2=10**

21. ஆய்தக் குறுக்கம் - எடுத்துக் காட்டுடன் விளக்குக.

22. இனங்குறித்தல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

23. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை ?

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக: புரிந்த

25. வெற்றிலை - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

26. அன்பின் ஐந்திணை என்பவை யாவை ?

27. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

**குறிப்பு : பகுதி 3 ல்** வினா எண் 35 ல் காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** 2x5=10

28. கீழுள்ள பாடலில் பயின்று வரும் பா வகையைக் குறிப்பிட்டு, பா இலக்கணம் தருக.
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

29. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் - இதில் பயின்றுள்ள அணியை விளக்குக.

**அல்லது**

தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.** 2x5=10

31. மெல்ல மெல்ல மற - என்னும் சிறுகதையில் கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதை சுருக்கி வரைக.

32. அன்றாடம் வாழ்வில் பயன்படுத்தும் சட்டங்களில் இரண்டினைக் குறித்து எழுதுக.

33. அயோத்தி தாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு குறித்துக் கட்டுரை எழுதுக.

## பகுதி - 3

**34.** (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. **3+2=5**

சுரேஷ் வாட் ஹேப்பண்ட் ? ஏன் லேட்டா வர்ரே ? வழியிலே ஒரே டிராஃபிக் ஜாம்டா அதனாலதான் லேட். சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும் ? டிக்கட் கிடைச்சுதா ?

(ஆ) கீழ் உள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றி எழுதுக.

51, 178, 24, 63

**35.** **கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க.** **3+2=5**

(அ) This is the age of computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, firm, industrial concerns and government departments, lot of information processing is required.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

1. Time is gold.
2. The face is the index of the mind.
3. Look before you leap.
4. Live and let live

**35.** **குறிப்பு : காதுகேளாத மாணவர்களுக்குக்கான மாற்று வினா.** **5x1=5**

மணிமேகலை பள்ளிக்குச் செல்லும் வழியில் கண்ணொளி இழந்த மூதாட்டி ஒருவர், சாலை ஓரத்தில் அமர்ந்து கூடை முடைதலில் ஈடுபட்டிருந்ததைப் பார்த்தாள். மூதாட்டியின் கைகள் இரண்டும் கூடை முடைதலில் விரைவாகச் சுழன்று கொண்டிருந்தன. இவரால் எப்படி இவ்வளவு விரைவாகச் செயல்பட முடிகிறது என மணிமேகலை வியப்படைந்தாள்.

ஒருநாள் தன் இருகண்களையும் கட்டிக் கொண்டு மணிமேகலை வீட்டிற்குள் அங்கும் இங்கும் நடந்து பார்த்தாள். அங்கு இருந்த மேசையின் மீது மோதிக் கொண்டாள். அப்போது தான் கண்ணொளி இழந்தவர்கள் பற்றி அவர்களது துன்பம் எத்தகையது என எண்ணிப் பார்த்தாள். அன்று முதல் மாற்றுத்திறனாளிகளிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

1. மணிமேகலை பள்ளி செல்லும் வழியில் யாரைப் பார்த்தாள் ?
2. மூதாட்டி என்ன செய்து கொண்டிருந்தார் ?
3. மணிமேகலை எதனைக் கண்டு வியப்படைந்தாள் ?
4. மணிமேகலை வீட்டில் என்ன செய்தாள் ?
5. மாற்றுத் திறனாளிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என மணிமேகலை நினைத்தாள் ?

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

கண்ணன் பத்தாம் வகுப்பில் படிக்கிறான். காலையில் ஐந்து மணிக்கே எழுந்து விடுவான். அவனுடைய அம்மாவுக்கு, அவனால் இயன்ற உதவிகளைச் செய்வான். பின்னர் எட்டு மணியளவில் நடந்தே பள்ளிக்குச் செல்வான். ஒரு நாள் ஓட்டமும் நடையுமாய்ப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது சாலையில்...

அல்லது

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

மழை அல்லது கடல்

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்தெழுதுக. 1x5=5

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

-பாரதியார்

## பகுதி - 6

38. வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவத்தை நிரப்புக. பெயர் நிரப்பும் இடத்தில் உமது பதிவு எண்ணை மட்டும் எழுதுக. 1x5=5

Website: www.usefuldesk.com Google+: https://plus.google.com/+Usefuldesk4u

Facebook: www.facebook.com/usefuldesk Twitter: www.twitter.com/usefuldesk E-mail: info@usefuldesk.com

பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. 3+2=5

பதினொன்றாம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகிறது. தேவி அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்துவிட்டன, ஆனால் அவள் பெற்றோர், அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை. 'நான் சொன்னது தான், நீ படித்தது போதும், இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்ய வேண்டியது தான்' என்று கூறியவாறே அவளுடைய தந்தை வெளியே சென்றுவிட்டார். 'அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார், அப்பாவின் பேச்சைக் கேள்' என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள் தேவி.

1. இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள் ?
2. உங்களுக்கு இப்படியொரு நிலை எற்பட்டால் நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள் ?
3. இச்சூழலில் நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் திறன் என்ன ?

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடைளிக்க.

இரண்டு நாள் பெய்த பெருமழையின் விளைவாக அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால், கதிரவனின் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால் தன்னை கண்டிப்பார்கள் என்று கதிரவனுக்குத் தெரியும். திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்றும் அவன் நினைக்கிறான்.

1. இந்நிலையில் கதிரவன், தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான் ?
2. கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 1x10=10

(அ) குடிநீர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

அல்லது

(ஆ) நீவிர் கண்டு களித்த இடம் குறித்து உமது நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக. 1x10=10

(அ) கணினியின் தோற்றம் - தலைமுறைகள் - வகைகள் - கணினி வழிக்கல்வி - உலகம் உள்ளங்கையில்.

அல்லது

(ஆ) நூலகம் - நூலகத்தின் தோற்றம் - நூலகத்தின் பல்வேறு பெயர்கள் - நூலகத்தின் பயன்கள் - பள்ளி நூலகம் - தமிழக நூலகங்கள்.

www.usefuldesk.com

Website: www.usefuldesk.com Google+: https://plus.google.com/+Usefuldesk4u

Facebook: www.facebook.com/usefuldesk Twitter: www.twitter.com/usefuldesk E-mail: info@usefuldesk.com